www.tamilarangam.net

# மனதின் ஓரங்களும் நோக்கி...



ஹரன்

விழித்தெழுந்தும் கட்டிலால் இறங்க மனமின்றிப் புரண்டு கொண்டிருந்தான் லவன். தொலைபேசி அலறலால் நித்தொழிய அவன் விரைவில் உரையாடலை முடித்து விட்டு பிரமை பிடித்தவன் போல் யோசித்தபடி அறையை நோக்கி வந்தான். அது அவனது நண்பன் இலத்தின் அழைப்பு. லவனுடன் வந்திறங்கிய இலம் "மச்சான் நாங்கள் வந்து இன்றுடன் மூன்று வருடமடா" என்பதைச் சொல்லவே காலை வேளையில் அந்தத் தொலைபேசி அலறல். தோளில் துவாயைப் போட்ட படி குளியலறையை நோக்கி மெல்ல நடந்தான். பழைய ஞாபகங்கள் அலையலையாக மனதில் ஓடியபடி இருந்தன. இலண்டன் வருவதற்கு முன்னையவை, பின்னையவை என்றெல்லாம் சொந்தமா?

அவன் அதைவழந்து கொண்டு பயணம் ஏறவில்லை. கழுத்திலும் காதிலும் எதுவுமின்றி அவனைப் பயணம் அனுப்ப வந்த நான்கு சகோதரிகளையும் தாயையும் பிரியமனமின்றி பிரிகின்றான் லவன். கடன் தொல்லை மேற்படிப்பு, பாதுகாப்பு என்ற பல காரணிகள் அவனை நாட்டை விட்டு அனுப்பி வைத்தன. போராட்டத்தில் ஒருவனை இந்திய இராணுவத்திடம் பறிகொடுத்த அந்தக் குடும்பம் மற்றவனையும் அனுப்பி

www.tamilarangam.net

என்று எனக்கே தெரியாது என்று விளக்கினார். இப்படியே உணர்ந்த அவன் சமாளித்து விட்டு வீதி ஓரமாக இருந்த படி நீளநடந்தான். நாம் இலங்கையில் பெரும்பான்மையின-ராக இருந்திருந்தால் சிங்களவர் என்ன பாடுபட்டிருப்பார்கள். "எம்மவர்கள் கொம்பில்லாக் குதிரைகள் தான்" என்று எங்கோ அவன் வாசித்தது நினைவுக்கு வந்தது.

யாவற்றுக்குமிடையே அவன் 'எக்கவுண்டன்சி' பகுதி இரண்டும் சித்தியடைந்து விட்டான். இவைபற்றி யாரிடமும் அவன் பேசுவதில்லை. பட்டப்பின் படிப்பும் பழக்கமும் திட்டமும் அவனிடம் உண்டு. கடும் முயற்சியால் பகுதிநேரமாக ஒரு கணக்காளர் நிறுவனத்தில் சேர்ந்து விட்டான். இதுவரையில் கடையில் பல்லைக் காட்டி வேலை செய்தவனுக்கு ஓர் உதார் வந்து விட்டது.

உழுகிற மாடு ஊரில் உழ வேண்டும் என்பதே அவன் சித்தாந்தம். ஆனால் அவன் அந்நிய மண்ணையல்லவா உழுகின்றான். ஆனால் அவன் தவறிய வரலாற்றுக் கடமையை அவன் சகோதரி செய்யப்புறப்பட்ட கதையை அண்மையில் அந்த தாயின் மடல் தாங்கி வந்தது. ஊருக்கு ஒத்தது தான் என் பிள்ளைகளும் என தாய் எழுதியிருந்தாள், அந்த மடலை. அவன் விறைத்துப் போய்விட்டான். தங்கையை ஒரு கணம் மனதில் நிறுத்தி ஏங்கி தவிக்க விக்கியபடி தன் சகோதரனின் படத்தை உற்று நோக்கினான். அவனது படம் வீரத்தின் விளைநிலமாக கம்பீரத் தோற்றத்துடன் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கிறது. பட்டாலே பழம் கொட்ட இடியே கெடும், என்பது உண்மையா..? என்று ஏங்கினான். நாம் ஆறு பிள்ளைகளோடும் வேறு நிலாவில் தாயைச் சுற்றியிருந்து சோற்றுக் கவளம் வாங்கி உண்ணும் போட்டி போடாது பொறுமையாய் இருப்பவர்கள் அந்தச் சகோ-தரன் அகிலனும், தங்கை தமிழரசியுமே. வறுமையின் நிறம் தெரிந்தவன் அவன்.

இந்த மூன்று வருடத்துக்குள் ஓரளவு சம்பாதித்து குடும்பக் கடன்களை ஓரளவு அடைத்து விட்டான். பெண் சகோதரிகட்கு

